

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 12.01.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்










## தேசிய நிகழ்வுகள்

- **இந்தியாவில் சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலில் முதல் இடத்தை சென்னை ஐஐடி நிறுவனம்** பிடித்துள்ளது.
    - நாட்டின் சிறந்த 100 கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலில் சென்னை ஐஐடி முதலிடம் பிடித்துள்ளது. மத்திய அரசு வெளியிட்ட இந்த பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் 14 ஆவது இடத்திலும், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் 21 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.
    - **செய்தி துளிகள்:**
        - அதே போல் நாட்டின் சிறந்த 200 பொறியியல் நிறுவனங்களுக்கான பட்டியலில் சென்னை ஐஐடி முதலிடத்தையும், அண்ணா பல்கலைக்கழகம் 9 ஆவது இடத்தையும், திருச்சி NIT 10 ஆவது இடத்தையும், SRM நிறுவனம் 36 ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான **நாசா 2017-ல் விண்வெளிக்கு வீரர்களை அனுப்புவதற்காக ஒரு தேர்வை** நடத்தியது. இதில் 17 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். இதில் சிலரை மட்டும் தேர்வு செய்து கடந்த 2 வருடமாக நாசா பயிற்சி அளித்து வந்தது. அந்த பயிற்சியில் மொத்தம் 11 பேர் வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளனர்.
    - **இந்த 11 பேரில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 41 வயதான**

**ராஜா ஜான் உர்புத்தூர் சாரியும் ஒருவர்.** இவரது தந்தை நிவாஸ் சாரி ஹைதராபாத்தைச் சேர்ந்தவர். ஹைதராபாதில் இன்ஜினீயரிங் படித்து முடித்த அவர் உயர்கல்விக்காக அமெரிக்காவுக்கு வந்தார்,

- **செய்தி துளிகள்:**
  - வரும் 2024-ல் நிலவுக்கு முதல்முறையாக பெண்ணை அனுப்ப நாசா முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதன் பிறகு 2030 வரை ஒவ்வொரு ஆண்டிலும் நாசா சார்பில் நிலவுப் பயணம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
  - நாசா ஆராய்ச்சி நிலையம், விண்வெளியில் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து வரும் நவம்பரில் 20 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஹாக்கி தமிழ்நாடு சார்பில் நடைபெற்ற மாவட்டங்களுக்கு இடையிலான சீனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் ஈரோடு அணி சாம்பியன் பட்டத்தை** கைப்பற்றியது.
  - வெற்றி பெற்ற அணிகளுக்கு ஹாக்கி தமிழ்நாடு தலைவர் சேகர் ஜே.மனோகரன், பொதுச் செயலாளர் எம்.ரேணுகா லட்சுமி, தொழிலதிபர்கள் ஆரோக்கியசாமி (அன்னை எண்டர்பிரைசஸ்), வி.முருகன் (வினாயகா மைன்ஸ் நிறுவனம்) ஆகியோர் பரிசளித்தனர்
  - **செய்தி துளிகள்:**

- வளைதடிப் பந்தாட்டம் பந்தின் எடை 156 கிராம் முதல் 163 கிராம் வரை இருக்கலாம். சுற்றளவு 22.4 செ.மீ முதல் 23.5 செ.மீ வரை இருக்கும்.
- இந்த ஆட்டக் காலத்தின் முதல் பகுதி 35 நிமிடம், ஓய்வு 5 நிமிடம், இரண்டாம் பகுதி 35 நிமிடம் ஆக மொத்தம் 75 நிமிடங்கள்.

- **ஐசிசி டி20 தரவரிசை பேட்ஸ்மேன்கள் பட்டியலில் இந்திய தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் 6-ஆவது இடத்தில்** உள்ளார். அதே நேரம் கோலி 9-ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார்.
    - சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சார்பில் டி20 தரவரிசைப் பட்டியல் 11.01.2020 அன்று வெளியிடப்பட்டது.
    - பேட்ஸ்மேன்கள் பட்டியலில் பாக். வீரர் பாபர் ஆஸம் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு ஆடுத்து ஆஸி. வீரர் ஆரோன் பின்ச், இங்கிலாந்து டேவிட் மலான், நியூஸி. காலின் மன்றோ, ஆஸி. வீரர் மேக்ஸ்வெல் ஆகியோர் உள்ளனர்.
    - **செய்தி துளிகள்:**
        - ஐ.சி.சி.யின் தலைமை நிர்வாக அதிகாரி: மனு சானே
        - நிறுவப்பட்டது : 15 ஜுன் 1909
        - தலைமையகம்: துபாய்

## முக்கிய தினங்கள்

- **சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளான ஜனவரி 12 ஆம் தேதி தேசிய இளைஞர் நாள்** (National Youth Day)

என இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது.

- 1984 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் இந்நாளினை ”தேசிய இளைஞர் நாளாக” அறிவித்தது, அதைத்தொடர்ந்து 1985-ல் ஜனவரி 12-ம் தேதி முதன்முதலாக கொண்டாடப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது

## திருக்குறள்

**குறள் எண் : 74**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : அன்புடைமை

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு.**

**விளக்கம் :** அன்பு, பிறரிடத்து விருப்புடனிருக்கும் தன்மையைக் கொடுக்கும், அ∴து அவனுக்கு நட்பு என்னும் அளவு கடந்த சிறப்பைக் கொடுக்கும்